**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இருப்பு), திருவில்லிபுத்தூர்.**
**முன்னிலை :- திரு. T.V.மணி, B.A., LL.B.,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

2025 ம் ஆண்டு ஜூலை திங்கள் 21 ஆம் நாள் திங்கள்கிழமை

IA.No.1/2024 in OS.No.192/2023

1) தேவராஜ்
2) முத்துச்செல்வி
3) முத்துசுசித்ரா ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

-எதிர்-

1) விஜயரங்கன்
2) சுப்புலட்சுமி . ... எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

இம்மனுவானது என் முன்பாக 26.06.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.செல்வகுமார், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.மல்லையா, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், மனுஉரை, எதிர்உரை, இருதரப்பிலும் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பும் கேட்கப்பட்டும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையிலிருந்தும் இன்று இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் கோரியுள்ள பரிகாரம் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதால் எதிர்மனுதாரர்கள்/ வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நிராகரிக்கக் கோரி, கட்டளை 7 விதி 11 கீழ் மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுவின் சுருக்கம்**

(2-i) பிராது தபசிலின் 1 வது அயிட்டச் சொத்து ஆதியில் போலப்ப நாயக்கருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு அவரது மறைவிற்கு பின் அவரது மகன் சுப்பையா அனுபவித்து வந்த நிலையில், மேற்படி சுப்பையாவிடமிருந்து 1 ம் மனுதாரர், சரியான

பிரதிபிரயோஜனத்தின் பேரில் வாய்மொழி கிரையம் கடந்த 12.02.1974 அன்று வருவாய்துறையில் பட்டா பெற்று, தீர்வை செலுத்தி அனுபவித்து வந்துள்ளார். அதே போல் பிராது தபசில் 2வது அயிட்ட சொத்து 1ம் மனுதாரரின் தகப்பனாரை பெற்ற தாயாரான லேட் ஸ்ரீரெங்கநாச்சியாரின் தகப்பனாரான லேட் வெங்கடசாமி என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டதாகும். ஷை லேட் வெங்கடசாமி, லேட் நாரணம்மாள் தம்பதியினருக்கு மூன்று பெண் வாரிசுகள், அவர்கள் அனைவரும் காலமாகிவிட்டனர். அந்த மூவரில் லேட் லட்சுமியம்மாள் மற்றும் அவரது கணவர் லேட் சின்னப்ப நாயக்கர் எந்தவிதமான வாரிசுமின்றி இறந்துவிட்டார்கள். லேட் வெங்கடசாமியின் மற்றொரு வாரிசான லேட் ஸ்ரீரெங்கநாச்சியார் தான் இந்த வழக்கின் 1ம் மனுதாரர், எதிர்மனுதாரர்களின் தாயார் ஆவார். ஷை லேட் ஸ்ரீரெங்கநாச்சியார் 1967ஆம் ஆண்டிலும், நாரணம்மாள் 1973ஆம் ஆண்டிலும் இறந்துவிட்டனர். ஷையார்கள் உயிருடன் இருந்த காலம் முதற்கொண்டு ஷையார்கள் ஒப்புதலுடன் பிராது தபசில் 2வது சொத்து 1ம் மனுதாரரின் அனுபவத்திலேயே இருந்து வந்துள்ளது. 10.11.1973ல் ஷையார் ஸ்ரீரெங்கநாச்சியாரின் முயற்சியினால் 1ம் மனுதாரர் பெயருக்கு வருவாய்துறையால் பட்டா வழங்கப்பட்டு, மேற்படியாரே தீர்வை முதலானவைகள் செலுத்தி சர்வ சுதந்திரமாய் சுமார் 40 ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளனர்.

(2–ii) பிராது தபசில் 3வது அயிட்ட சொத்தானது ஆதியில் ஓட்டக்காரன் மற்றும் இருளப்பன் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். மேற்படி இருவரும் 1961ஆம் ஆண்டு சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் 09.03.1961ஆம் தேதிய கிரைய ஆவண எண்.201/1961 மூலம் 1ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களின் தந்தையான லேட்.வெங்கிடசாமிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டனர். கிரைய காலம் முதல் லேட் வெங்கடசாமி அனுபவித்து வந்து ஷையாரின் முயற்சியில் 1ம் மனுதாரர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு தீர்வை முதலானவைகள் செலுத்தி சர்வ சுதந்திர பாத்தியதையாய் சுமார் 40 ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளனர். தபசிலின் 2, 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 1ம் மனுதாரர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.220, 315 ஆகும்.

(2–iii) பிராது தபசிலின் 4 வது அயிட்ட சொத்தானது ஆதியில் லேட் இராமசாமி நாயுடுக்கு சுந்தரபாண்டியம், வருவாய் கிராமம் பட்டா எண்.1263 ன் படி பாத்தியப்பட்டு அவரது காலத்திற்கு பின் மேற்படி இராமசாமி நாயுடுவின் குமாரர் லேட் சீனிவாசன் அனுபவித்து வந்துள்ளார். மேற்படி சீனிவாசன் காலம் சென்ற பின் அவரது குமாரர் அரவிந்தன் அனுபவித்த நிலையில் 11.10.2010 ஆம் தேதியில் குன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.354/2010 ன் படி மேற்படி அரவிந்தன், 4 வது அயிட்ட சொத்தை பொறுத்து கிரையம், ஈடு, ஒத்தி, குத்தகை மற்றும் நீதிமன்ற வழக்குகள் போன்ற விவகாரங்களை மேற்கொள்ள சொல்லி பொது அதிகார ஆவணம் 1ம் மனுதாரருக்கு எழுதிக்கொடுத்துள்ளார்.

(2–iv) கடந்த 08.04.2004 அன்று 1ம் மனுதாரர், தபசில் 1, 2, 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 2ம் மனுதாரர் பெயருக்கு தானசெட்டில்மென்ட் ஆவண எண்.421/2004 எழுதிக்கொடுத்துள்ளார். ஷை தேதி முதல் தபசில் சொத்துக்கள் 2ம் மனுதாரருக்கு சர்வ சுதந்திரமாய் பாத்தியப்பட்டதாகும். தபசில் 1 முதல் 3 வரையிலான அயிட்ட சொத்துக்களை பொறுத்து 2ம் மனுதாரர் அவரது பெயரிலேயே தீர்வை முதலானவை செலுத்தி வந்துள்ளார். மேலும் 04.01.2012 அன்று 1ம் மனுதாரர் பிராது 4 வது அயிட்ட சொத்தை 3ம் மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். மேற்படி கிரைய ஆவணத்தில் 1ம் எதிர்மனுதாரர் கிரைய தரப்பினர்களை இன்னாரென்டு நிருபிக்கும் சாட்சிகளில் ஒருவராக கையொப்பம் செய்துள்ளார். மேற்படி கிரையமானது 1ம் எதிர்மனுதாரர் முன்னிலையில் அவருக்கு தெரிந்தே நடைபெற்றதாகும்.

(2–v) 1ம் மனுதாரரின் தாயார் ஸ்ரீரெங்கநாச்சியாரின் மூத்த சகோதரி லேட் ரெங்கநாயகி அவர் உயிருடன் இருந்த காலத்தில் 12.10.2010 அன்று அவருடைய மகள் முத்துலட்சுமிக்கு பிராது தபசில் 1 முதல் 3 வரையிலான சொத்துக்களில் பிரிவினையில்லாத பாதி பாகத்தை பொறுத்து தானசெட்டில்மென்ட் ஆவண எண்.4164 எழுதிக்கொடுத்துள்ளார். அதே போல 1ம் எதிர்மனுதாரர், 2ம் எதிர்மனுதாரருக்கு பிராது 1 முதல் 3 தபசில் அயிட்ட சொத்துக்களில் 1/3 பங்கை பொறுத்து பதிவு செய்யப்பட்ட மோசடியான 16.11.2010ம் தேதிய அடமான ஆவண

எண்.4459/2010 ஏற்படுத்தியுள்ளார். 2ம் மனுதாரர் ஷை தானசெட்டில்மென்ட் மற்றும் 16.11.2020ம் தேதிய அடமான ஆவணம் ஆகியவைகள் இல்லா நிலையது எனக்கோரும் விளம்புகை பரிகாரமும், 1 முதல் 3 வரையிலான அயிட்ட சொத்துக்களை பொறுத்து எதிர்மனுதாரர்கள் உட்பட 6 நபர்கள் எவ்விதமான சட்டத்திற்கு புறம்பான வகையில் விற்கிரையமோ, வில்லங்க பாராதீனமோ செய்யக்கூடாதென நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்கும் படி ஸ்ரீவில்லிபுத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.19/2011 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்ததாகவும் அதில் 1, 2 எதிர்மனுதாரர்கள் முறையே 4 மற்றும் 6 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டிருந்த வழக்கினை விசாரித்த ஷை நீதிமன்றம் அ.வ.எண்.19/2011 வழக்கின் வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருவதாக முடிவு செய்து அதனடிப்படையில் 12.10.2010 அன்று தானசெட்டில்மென்ட் ஆவணம் மற்றும் 16.11.2010ம் தேதிய அடமான ஆவணம் ஆகியவைகள் இல்லா நிலையது என விளம்புகை பரிகாரமும் அ.வ.எண்.19/2011 வழக்கின் வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் உள்ள அ.வ.எண்.19/2011 பிராது சொத்துக்களை அதன் பிரதிவாதிகள் விற்கிரையம் வில்லங்க பாராதீனம் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் வழங்கியுள்ளது.

(2–vi) அ.வ.எண்.192/2023ல் உள்ள பிராது தபசில் 1 முதல் 3 வரையிலான சொத்துக்கள் 2ம் மனுதாரருக்கு பாத்தியப்பட்டு ஷை சொத்துக்கள் அவரது அனுபவத்தில் இருந்து வந்துள்ளது என அ.வ.எண்.19/2011 வழக்கில் ஸ்ரீவில்லிபுத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் முடிவு செய்யப்பட்ட நிலையில், எதிர்மனுதாரர்கள் 1 முதல் 3 வரையிலான அயிட்டச் சொத்துக்களில் 1/3 பாகம் கேட்டு அசல் வழக்கு 192/2023 தாக்கல் செய்திருப்பது சட்டப்படி நிலை நிற்கத்தக்கதல்ல எனவும் Res Judicata என்ற சட்ட கோட்பாட்டின் படி நிராகரிக்க வேண்டியதாகும்.

(2–vii) அசல் வழக்கு தபசில் 4வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் மனுதாரர். 3ம் மனுதாரருக்கு ஆதரவாக எழுதிய கிரைய ஆவண எண்.42/2012ல் 1ம் எதிர்மனுதாரர் தரப்பினர்களை இன்னாரென்று நிரூபிக்கும் சாட்சிகளில் ஒருவராக

கையொப்பம் செய்துள்ள நிலையில் தற்போது கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல எனவும், அவரை கட்டுப்படுத்தாது எனவும் விளம்புகை பரிகாரம் 1ம் எதிர்மனுதாரர் கோரியிருப்பது காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாலும் EStoppel என்ற சட்ட கோட்பாட்டின் படி வருவதாலும், நிலைத்து நிற்கத்தக்கதல்ல.

(2–viii) அசல் வழக்கில் 1 முதல் 3 வரையிலான அயிட்ட சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை எதிர்மனுதாரர்கள் இருவரும் கோரியுள்ள நிலையில் பிராது 4 வது அயிட்ட சொத்தை பொறுத்து 1ம் எதிர்மனுதாரர் மட்டும் ஷை 04.01.2012 ஆம் தேதிய கிரைய ஆவணம் செல்லத்தக்கதல்ல எனவும் அவரைக் கட்டுப்படுத்தாது எனவும் விளம்புகை பரிகாரம் அசல் வழக்கில் கோரியிருப்பது Misjoinder of causes of action என்ற கோட்பாட்டின் படி அசல் வழக்கு நிராகரிக்கக்கூடியதாகும். எனவே வாதிகள் கோரியுள்ள பரிகாரம் உரிமையியல் நடைமுறைச் சட்டத்தின் படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்பதால் வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்குரை நிராகரிக்கும் படி தாக்கலாயிற்று.

3) <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்உரையின் சுருக்கம்</u>

(3–i) பிராது 1வது தபசில் சொத்து வாதிகள், 1ம் பிரதிவாதியின் தகப்பனார் வெங்கிடசாமிக்கு 1950 ஆண்டு வாய்மொழி கிரையம் மூலம் பாத்தியப்பட்டு ஷை கிரையம் மூலம் அவரது குடும்பத்துடன் ஆண்டனுபவித்து வந்து பிராது 1வது தபசில் சொத்தை பொறுத்து யாருக்கும் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் வாதிகள், 1ம் பிரதிவாதியை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு கடந்த 02.05.2003ம் தேதி காலமாகியுள்ளார். ஆகவே பிராது 1வது தபசில் சொத்தில் வாதிகளுக்கு பிரிவினையில்லாத 2/3 பங்கு கிடைக்கக்கூடியதாகும். மேலும் பிராது 2வது தபசில் சொத்து வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் தாயாரான ஸ்ரீரெங்கநாச்சியாருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டு ஷையார் யாருக்கும் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு 1967ல் காலமாகியுள்ளார். பிராது 2வது தபசில் சொத்தில் வாதிகளுக்கு பிரிவினையில்லாத 2/3 பங்கு கிடைக்கக்கூடியதாகும். மேலும் பிராது 3வது தபசில் சொத்து வாதிகள் மற்றும் 1ம்

பிரதிவாதியின் தகப்பனாரான வெங்கிடசாமிக்கு 09.03.1961 ஆம் தேதிய கிரையப் பத்திரம் மூலம் சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டு பிராது 3 வது தபசில் சொத்தை பொறுத்து வைஷ வெங்கிடசாமி யாருக்கும் எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியை வாரிசுதாரர்களாக விட்டுவிட்டு 02.05.2003 அன்று காலமாகியுள்ளார். ஆகவே பிராது 3 வது தபசில் சொத்தில் வாதிகளுக்கு பிரிவினையில்லாத 2/3 பங்கு கிடைக்கக்கூடியதாகும். மேலும் பிராது 4 வது தபசில் சொத்து 1ம் வாதிக்கு மேற்படி மைனராக இருந்த காலத்தில் 26.11.1973 ஆம் தேதிய கிரைய பத்திரம் மூலம் பாத்தியப்பட்டும் அதனை வைஷயார் மேஜரான பின்பு அடைந்து அனுபவித்து வந்து ரெங்கமன்னார் குமாரர் பலராமனுக்கு 16.11.2010 ஆம் தேதிய அடமானப்பத்திரம் மூலும் அடமானம் வைத்தும் அனுபவித்து வருகிறார். ஆகவே பிராது 4 வது தபசில் சொத்தில் 1ம் வாதியை தவிர வேறு யாருக்கும் எந்தவித உரிமையும் கிடையாது. பிராது 4 வது தபசில் சொத்து 1ம் வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டதாகும். வைஷ உண்மை சங்கதிகளுக்கு மாறாகவும், விரோதமாகவும், போர்ஜரியாகவும் ஆவணங்கள் மூலமும் 1ம் மனுதாரர் ஏற்படுத்தியுள்ள பட்டாக்கள், தானசெட்டில்மென்ட் பத்திரங்கள், கிரைய பத்திரங்கள் ஆகிய அனைத்தும் சட்டப்படிக்கு செல்லத்தக்கதல்ல. 1ம் மனுதாரரால் ஏற்படுத்தப்பட்டுள்ள பட்டாக்கள், தானசெட்டில்மென்ட் பத்திரங்கள், கிரைய பத்திரங்களின் அடிப்படையில் பிராது தபசில் சொத்துக்களில் வாதிகளுக்குரிய பங்கோ, உரிமையோ கட்டுபடுத்தாது. எனவே எதிர்மனுதாரர்களின் பக்க செலவுத் தொகையுடன் மனுதாரர்களது மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4)** மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இந்த மனுவில் தற்போது தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் மனுதாரர்கள் கோரிய பரிகாரத்தை அவருக்கு வழங்க வேண்டுமா? என்பதேயாகும்.

5) மனுஉரை, எதிர்உரை பரிசீலிக்கப்பட்டது. இருதரப்புவாதங்களும் கேட்கப்பட்டன. இருதரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6) <u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>

(6–i) மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் இம்மனுவினை பொறுத்தளவில் கோரும் பாரிகாரத்தை பொறுத்து மனு உரையில் சொல்லியுள்ள சங்கதிகளை முன்நிறுத்தி, மனு வாதுரை சமயத்தில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், இம்மனுவினை பொறுத்தளவில், எதிர்உரையில் சொல்லிய சங்கதிகளை முன்நிறுத்தி எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார்கள்.

(6– ii) தற்பொழுது இம்மனுவினை பொறுத்தவளவில், மனுதாரர்கள் கோரும் பரிகாரத்தை பொறுத்து சுருங்கக்கூறின், பிராது 1வது அயிட்ட சொத்து 1ம் மனுதாரருக்கு வாய்மொழி கிரையம் மூலம் பாத்தியப்பட்டு கடந்த 12.02.1974 அன்று வருவாய்துறையில் பட்டா பெற்று தீர்வை செலுத்தி அனுபவித்து வந்துள்ளார் என்றும் சொல்லும் பொழுது, அதற்கான பட்டா ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. மேலும் பிராது 2வது தபசில் சொத்து ஆதியில் லேட்.வெங்கடசாமி என்பவருக்கு பூர்வீகமாய் பாத்தியப்பட்டது என்றும் மேற்படி லேட்.வெங்கடசாமி, லேட்.நாரணம்மாள் ஆகியோர்கள் மற்றும் அவர்களின் காலத்திற்கு பின்பு அவர்களின் வாரிசுதாரர்களின் காலத்திற்கு பின்பும் அவர்கள் அனைவரும் உயிருடன் இருந்த காலத்திலேயே அனைவரின் ஒப்புதலின் படி 1ம் மனுதாரரின் அனுபவத்திலேயே இருந்து வந்துள்ளது என்றும், 10.11.1973ல் 1ம் மனுதாரர் பெயருக்கு வருவாய்துறையால் பட்டா வழங்கப்பட்டு, மேற்படியாரே தீர்வை முதலானவைகள் செலுத்தி சர்வ சுதந்திரமாய் சுமார் 40 ஆண்டு காலமாக அனுபவித்து வந்துள்ளனர் என்று சொல்லும் பொழுது அதற்கான ஆவணங்களை மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யபட்டவில்லை.

(6– iii) பிராது 3வது தபசில் சொத்தானது 09.03.1961ஆம் தேதிய கிரைய ஆவணப்படி 1ம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்களின் தந்தையான

லேட்.வெங்கடசாமிக்கு பாத்தியப்பட்டது என்று சொல்லும் பொழுது அதற்கான ஆவணத்தை மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக, எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், எ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி லேட்.வெங்கடசாமியின் முயற்சியால் 1ம் மனுதாரர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டு தீர்வை முதலானவைகள் செலுத்தி சர்வ சுதந்திர பாத்தியமாய் சுமார் 40 ஆண்டுகளாக அனுபவித்து வந்துள்ளார் என்று சொல்லும் பொழுது அதற்கான ஆவணத்தையும் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் தபசில் 2, 3 அயிட்ட சொத்துக்களுக்கு 1ம் மனுதாரர் பெயருக்கு வழங்கப்பட்ட பட்டா எண்.220, 315 என்பதற்கும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(6–iv) மேலும் பிராது 4வது அயிட்ட சொத்தானது ஆதியில் சீனிவாசன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து, அதன்பின்பு அவரது குமாரர் அரவிந்தன் அனுபவித்தும் 11.10.2010 ஆம் தேதியில் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணம் 1ம் மனுதாரருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் சொல்லி அதற்கான ஆவணமாக ம.சா.ஆ.1 குறியீடு செய்துள்ளார்.

(6–v) மேலும் பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து 1ம் மனுதாரர், 2ம் மனுதாரர் பெருக்கு 08.04.2004 அன்று பதிவு பெற்ற தானசெட்டில்மென்ட் ஆவணம் எழுதிக்கொடுத்து, தீர்வை முதலானவைகளை செலுத்தி 2ம் மனுதாரரின் அனுபவத்தில் உள்ளது என்று மனுதாரர்கள் தரப்பில் சொல்லும் பொழுது அதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் 04.01.2012 ஆம் தேதியில் 1ம் மனுதாரர் பிராது 4வது அயிட்ட சொத்தை 3ம் மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்று சொல்லும் பொழுது, அதற்கான ஆவணத்தை மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மாறாக எதிர்மனுதாரர்கள் தரப்பில், அதன் கணினி நகல் எ.ம.சா.7 ஆக குறியீடு செய்யபட்டுள்ளது. அதில் இம்மனுவில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்பது மறுக்கப்படவில்லை.

(6–vi) மேலும் 1ம் மனுதாரரின் தாயார் ஸ்ரீரெங்க நாச்சியாரின் மூத்த சகோதரி லேட்.ரெங்கநாயகி 12.10.2010 அன்று அவருடைய மகள் முத்துலெட்சுமிக்கு பிராது 1 முதல் 3 வரையிலான அயிட்ட சொத்துக்களில் பிரிவினையில்லாத பாதி பாகத்தை பொறுத்து தானசெட்டில்மென்ட் ஆவணம் எண்.4164 எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொல்லும் பொழுது அதற்கான ஆவணத்தை மனுதாரர்கள் தரப்பிலும், எதிர்மனுதாரர்கள் தரப்பிலும் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களில் 1/3 பங்கை பொறுத்து பதிவு செய்யப்பட்ட மோசடியான 16.10.2010 ஆம் தேதிய அடமான ஆவண எண்.4459/2010 ஏற்படுத்தியுள்ளார் என்பதற்கும் உரிய ஆவணம் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

(6–vii) 2ம் மனுதாரர் மேற்படி தானசெட்டில்மென்ட் மற்றும் 16.11.2020 ஆம் தேதிய அடமான ஆவணம் ஆகியவைகள் இல்லாநிலையுடையது என கோரும் விளம்புகை பரிகாரமும், 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து எதிர்மனுதாரர்கள் உட்பட 6 நபர்கள் எவ்விதமான சட்டத்திற்கும்புறம்பான வகையில் விற்கிரையமோ, வில்லங்க பராதீனமோ செய்யக்கூடாதென நிரந்தர தடை உத்தரவு பிறப்பிக்கும் படி ஸ்ரீவில்லிபுத்தூர், கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.19/2011 என்ற வழக்கினை தாக்கல் செய்திருந்ததை சொல்லியும், அதைப் பொறுத்து ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணங்கள் குறியீடு செய்துள்ளார்.

(7–i) தற்பொழுது இம்மனுவில் கோரிய பரிகாரத்திற்கு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எடுத்துரைப்படும் சங்கதியானது தற்பொழுது இந்த அ.வ.எண்.192/2023 ல் உள்ள பிராது தபசில் 1 முதல் 3 வரையிலான சொத்துக்கள் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணப்படி, ஏற்கனவே அ.வ.எண்.19/2011 வழக்கின் தபசில் சொத்துக்கள் என்றும் அவைகள் இம்மனுவில் உள்ள 2ம் மனுதாரர்/2ம் எதிர்வாதிக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வருவதாகவும், மேற்படி ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 ஆவணப்படிக்கு 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களை பொறுத்து முடிவாகிவிட்டபடியால் தற்பொழுது எதிர்மனுதாரர்கள்/வாதிகள் மேற்படி 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களில் 1/3 பாகம் கேட்டு இந்த அ.வ.எண்.192/2023 யை

தாக்கல் செய்திருப்பது முன்தீர்ப்பு என்ற சட்டகோட்பாட்டின் படி நிராகரிக்க வேண்டிய ஒன்று என்றும், மேலும் பிராது 4 வது தபசில் அயிட்ட சொத்தை பொறுத்து 1 ம் மனுதாரர், 3 ம் மனுதாரருக்கு கிரையம் செய்து கொடுதுதுவிட்ட படியால், மேற்படி கிரைய ஆவணம் பொறுத்து கட்டுப்படுத்தாது என 1 ம் வாதி கோரியிருப்பது காலாவதி தோசத்தால் பாதிக்கப்பட்டிருப்பதாலும், முரண்தடை என்ற சட்டக்கோட்பாட்டின் படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும் பிராது 1 முதல் 3 அயிட்ட சொத்தின் பேரில் பாகப்பிரிவினை கோரியும், பிராது 4 வது அயிட்ட சொத்தின் பேரில் விளம்புகை பரிகாரம் கோரியிருப்பது Misjoinder of cause of action என்ற சட்டக்கோட்பாட்டின் படி அசல் வழக்கு நிராகரிக்கக் கூடியது என்று சொல்லி பரிகாரம் கோரி இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில் வாதுரை செய்யப்பட்டது.

(7–ii) மேற்படி மனுவிற்கு எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், மேற்கண்டவாறு எதிர்உரையும் தாக்கல் செய்யப்பட்டும் மனு வாதுரை சமயத்தில், எ.சா.ஆ.1 முதல் எ.சா.ஆ.13 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்களை குறியீடு செய்து கொள்வதில் மனுதாரர்கள் தரப்பில் எவ்விதமான ஆட்சேபணையும் தெரிவித்துக்கொள்ளப்படவில்லை. மேலும் வெங்கிடசாமி என்பவர் வாதிகள் மற்றும் 1 ம் பிரதிவாதியை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு கடந்த 02.05.2003 ஆம் தேதி இறந்து போயுள்ளார் என்பதை காட்டுவதற்காக எ.சா.ஆ.2 அவருடைய இறப்புச் சான்றிதழ் பதிவு அசல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பிராது 1 வது தபசில் சொத்தை பொறுத்தும், பிராது 2 வது தபசில் சொத்தை பொறுத்தும் வாதிகளுக்கு 2/3 பிரிவினையில்லாத பங்கு பாகம் கிடைக்கக்கூடியது என்றும் பிராது 3 ம் அயிட்ட சொத்தை பொறுத்து வெங்கிடசாமிக்கு 09.03.1961 ஆம் தேதிய கிரையப் பத்திரம் மூலம் சுயார்ஜிதமாய் பாத்தியப்பட்டது என்று சொல்லி எ.சா.ஆ.11 ஆவணத்தையும் தாக்கல் செய்துள்ளார். அவர் 02.05.2003 ஆம் தேதியில் இறந்து போன பின்பு வாதிகளுக்கு பிராது 3 ம் தபசில் சொத்தில் 2/3 பங்கு பாகம் கிடைக்கக்கூடியது என்று சொல்லியும், பிராது 4 ம் அயிட்ட சொத்தில் 1 ம் வாதி மைனராக இருந்த காலத்தில் 26.11.1973 ஆம் தேதிய கிரைய ஆவணம் மூலம்

பாத்தியப்பட்டது என்று சொல்லி அதன் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்பு, அவர் மேஜரானவுடன் பலராமனுக்கு 16.11.2010 ஆம் தேதிய அடமான பத்திரம் மூலம் அடமானம் வைத்து அனுபவித்து வருகிறார் என்று சொல்லி அதற்கான பதிவு ஜெராக்ஸ் நகலை எ.சா.ஆ.6 ஆகவும், வில்லங்க சான்றிதழ் எ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்துள்ளார். மேலும் பிராது 4ம் தபசில் சொத்து 1ம் வாதிக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்று சொல்லியும் வாதுரை செய்யப்பட்டது.

(7–iii) மேலும், மேற்படி உண்மை சங்கதிகளுக்கு மாறாகவும், விரோதமாகவும், போர்ஜரியாகவும் ஆவணங்கள் மூலமும் 1ம் மனுதாரர் ஏற்படுத்தி உள்ள பட்டாகள், தானசெட்டில்மென்ட் பத்திரங்கள், கிரைய பத்திரங்கள் ஆகிய மொத்தம் சட்டபடி செல்லத்தக்கதல்ல என்றும் அதனால் வாதிகளுக்குரிய பங்கையும், உரிமையையும் கட்டுப்படுத்தாது என்றும் சொல்லியும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் மீதமுள்ள ஆவணங்களான எ.சா.ஆ.1, எ.சா.ஆ.3, எ.சா.ஆ.4, எ.சா.ஆ.7, எ.சா.ஆ.10 போன்ற ஆவணங்களையும் குறியீடு செய்துள்ள பொழுதும், தற்பொழுது இம்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் முந்தைய ஆவணங்களாகவும், சொத்துரிமை பாத்தியம், அனுபவம் போன்ற ஆவணங்களாகவும், முன்பாத்தியஸ்தர்களின் ஆவணங்களாக உள்ள பொழுதும், மேற்படி இருதரப்பிலும் குறியீடு செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் உண்மை தன்மை மற்றும் நம்பகத்தன்மையை அசல் வழக்கில் தான் விரிவான விசாரணை மூல் தெரியவரும் என்பதாலும் ம.சா.ஆ.2, ம.சா.ஆ.3 மற்றும் எ.சா.ஆ.12, எ.சா.ஆ.13 ஆவணங்களை பொறுத்து தற்பொழுது மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கக்கூடியதாக இல்லை என்றும் இந்நீதிமன்றம் தீர்மானித்து பிரச்சனை எண்.1 க்கு விடை காண்கிறது.

முடிவில், இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்ட பின்னர் 2025ம் ஆண்டு

ஜூலை திங்கள் 21 ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

T V MANI
Digitally signed by T V MANI
Date: 2025.07.21 18:55:48 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

மனுதாரர்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்

ம.சா.ஆ.1 – 11.10.2010 ஆம் தேதிய பொதுஅதிகார ஆவணம் அசல்
ம.சா.ஆ.2 – அ.வ.எண்.19/2011 ல் 14.08.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல்
ம.சா.ஆ.3 – அ.வ.எண்.19/2011 ல் 14.08.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல்

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்

எ.சா.ஆ.1 – நிலஉரிமை விபரங்கள் இ.எண்.10(1) பிரிவு கணினி நகல்
எ.சா.ஆ.2 – ஆர்.வெங்கடசாமியின் இறப்பு சான்றிதழ் அசல்
எ.சா.ஆ.3 – 2004 ஆம் ஆண்டு பத்திர எண்.421 ன் சான்றிட்ட நகல்
எ.சா.ஆ.4 – ஆவண எண்.61/1971 ன் சான்றிட்ட நகல்
எ.சா.ஆ.5 – 1973 ஆம் ஆண்டு பத்திர எண்.1569 ன் சான்றிட்ட நகல்
எ.சா.ஆ.6 – 16.11.2010 ஆம் தேதி அடமான ரூ.10,000/–க்கு எழுதிய பத்திரம் ஜெராக்ஸ் நகல்
எ.சா.ஆ.7 – 04.01.2012 ஆம் தேதிய கிரையம் ரூ.30,000/–க்கான பத்திரம் நகல்
எ.சா.ஆ.8 – 17.07.2023 தேதிய வில்லங்க சான்று
எ.சா.ஆ.9 – விஜயரங்கன்வெங்கிடசாமி, சுப்புலட்சுமி பலராமன் ஆகியோர்களின் ஆதார் அடையாள அட்டை நகல்
எ.சா.ஆ.10 – ஆவண எண்.1916/1920 ன் நகல்
எ.சா.ஆ.11 – ஆவண எண்.201/1961 ன் சான்றிட்ட நகல்
எ.சா.ஆ.12 – அ.வ.எண்.19/2011 ல் 14.08.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரை சான்றிட்ட நகல்
எ.சா.ஆ.13 – அ.வ.எண்.19/2011 ல் 14.08.2014 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பாணை சான்றிட்ட நகல்

T V MANI
Digitally signed by T V MANI
Date: 2025.07.21 18:55:53 +0530

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**
IA.No.1/2024 in OS.No.192/2023
**உத்தரவு நாள் – 21.07.2025**